6.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>நெல் மூட்டைக்கு 65 கிலோ மட்டுமே: கலெக்டர் உத்தரவு</u>

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை ஆட்சியர் சுப்பிரமணியன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், நெல் மூட்டைக்கு 67 கிலோ வைத்து, வியாபாரிகள் கொள்முதல் செய்வதாக எழுந்த புகாரை விசாரித்த மாவட்ட ஆட்சியர், அரசாங்கம் நிர்ணயித்துள்ள 65 கிலோ அளவில் மட்டுமே, நெல் மூட்டையை கொள்முதல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார். மேலும் உசிலம்பட்டி பகுதி விவசாயிகளுக்கு, அரசாங்கம் நிர்ணயித்துள்ள கரும்பு டன்னுக்கு ரூ.2616 என்ற விலையை, தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகிகள் அளிக்க வேண்டும். மேலும் நிலுவையிலுள்ள ரூ. 5.80 கோடியை விவசாயிகளுக்கு உடனே வழங்க வேண்டும் என சர்க்கரை ஆலை பிரதிநிதிக்கு உத்தரவிட்டார்.

### <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

திருமானூர் அருகே உள்ள கீழக்காவட்டங் குறிச்சியில் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் நடைபெற்ற இம்முகாம் கீழக்காவட்டங் குறிச்சி, மேலக்காவட்டங் குறிச்சி,தட்டான் சாவடி, உள்ளிட்ட கிராமங்களில் நடத்தப்பட்டது. ஊராட்சித் தலைவர் நளினி ராஜேந்திரன் தலைமையில், கால்நடைத் துறை உதவி இயக்குநர் பாஸ்கரன் தொடக்கி வைத்தார். இதில் கால்நடை உதவி மருத்துவர்கள் மணிகண்டன், மகாலெட்சுமி, கால்நடை ஆய்வாளர்கள் பிரபாகரன், செல்வராணி உள்ளிட்டோர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். இதில் 654 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன.

## <u>கோமாரி நோய்த் தடுப்பு முகாம்</u>

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாமை ஆட்சியர் புதன்கிழமை ஆய்வு செய்தார். கால்நடை களுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், முறையான வகையில் பராமரிக்கவும், விவசாயிகளுக்குக் கால்நடை பராமரிப்புத் துறையினர் பல்வேறு நோய்த் தடுப்பு முறைகள் குறித்து செயல் விளக்கம் கொடுக்கின்றனர். இதனையடுத்து, கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாமக்கல், சிலுவம்பட்டி கிராமத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய்த் தடுப்பூசி முகாமை ஆட்சியர் ஆய்வு செய்தார். 21 நாள்கள் நடைபெறும் இந்த முகாமில், மாடுகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் சக்திவேலு, உதவி இயக்குநர்கள் பாஸ்கர், ஜனகராஜன், மோகன்ராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>தேனி மாவட்டத்தில் பெய்யும் மழையால் அணைகள், கண்மாய்களுக்கு நீர்வரத்து! கோடையில் மழை கிடைத்ததால் விவசாயிகள் உற்சாகம்</u>

தேனி : தேனி மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக பெய்து வரும் கோடை மழையால், அணைகள், கண்மாய்களுக்கு நீர் வரத்து தொடங்கி உள்ளது. கோடையின் தொடக்கத்தில் மழை பெய்துள்ளதால் விவசாயி கள் உற்சாகம் அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் கடந்த 2011, 2012, 2013 ஆகிய மூன்று ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. மாவட்டம் முழுவதும் வறட்சி நிலவியது. இந்நிலையில் கடந்த 2014ம்

ஆண்டு ஓரளவு மழை பெய்தது. இதில் அணைகள், கண்மாய்களுக்கு சிறிதளவு மட்டுமே நீர் வரத்து இருந்தது. அடுத்து இரண்டு மாதங்கள் மழை இல்லாததால் அணைகள், கண்மாய்கள் வற்றத்தொடங்கின. நடப்பு ஆண்டு கோடையின் துவக்கமே கடுமையாக இருந்தது. இதனால் விவசாயிகள் விரக்தியில் இருந்தனர். முல்லை பெரியாறு, வைகையில் நீர் மட்டம் குறைந்ததால் தேனி, மதுரை மாவட்டங்களில் குடிநீருக்கு கேள்விக்குறி எழுந்தது. தவிர மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட மானாவாரி பயிர்களின் நிலையும் கேள்விக்குறியானது. இந்நிலையில் கடந்த நான்கு நாட்களாக மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. தினமும் மாலையில் இரண்டு மணி நேரம் வரை மழை பெய்கிறது. தொடர்ந்து சாரலும் பெய்கிறது.இதனால் அணைகள் மற்றும் கண்மாய்களுக்கு நீர் வரத்து தொடங்கி உள்ளது. கோடையின் துவக்கத்தில் பெய்த மழையால் விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழையளவு மி.மீ.,ல்: ஆண்டிபட்டி 3.2, அரண்மனை புதூர் 11.2, போடி 40.2, கூடலூர் 2, பெரியகுளம் 42, பெரியாறு அணை 20, சோத்துபாறை அணை 18, தேக்கடி 5, வைகை அணை 52, வீரபாண்டி 4. இந்த மழையால் அணைகள் மற்றும் கண்மாய்களுக்கு நீர் வரத்து தொடங்கி உள்ளது. அணைகளின் நீர் மட்டம், நீர் வரத்து விவரம்: வைகை அணை நீர்மட்டம் 35.07 அடி, நீர் வரத்து விநாடிக்கு 146 கனஅடி, வெளியேற்றம் 60 கன அடி. பெரியாறு அணை நீர்மட்டம் 112.40, நீர்வரத்து 436 கன அடி, வெளியேற்றம் 250 கன அடி. மஞ்சளாறு அணை நீர் மட்டம் 29.65 அடி. நீர் வரத்து 5 கன அடி, வெளியேற்றம் 45 கன அடி, சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 77.40 அடி, நீர் வரத்து 10 கனஅடி, வெளியேற்றம் 5 கன அடி.

## <u>தொடர் மழையால்விவசாயிகள் மகிழ்ச்சி</u>

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டு நாட்களாக தொடர்ந்து மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்சியடைந்துள் ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சில தினங்களாக கடும் வெப்பம் வீசி வந்த நிலையில், மூன்று நாட்களுக்கு முன்பு மாவட்டத்தில் பல இடங்களில், திடீரென இடியுடன் கூடிய கனமழை பெய்தது. திடீர் மழையால், வெப்பத்தின் தாக்கம் குறைந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடியுடன் கூடிய கன மழை பெய்தது. தொடர்ந்து, இரண்டு நாட்களாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் மட்டுமன்றி, பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக போச்சம்பள்ளியில், 39.6 மி.மீ., மழை பெயத்து. பெனுகொண்டாபுரம், 26.2, சூளகிரி, 26, ஓசூர், 22, தேன்கனிக்கோட்டை, 17, நெடுங்கல், 4 மி.மீ., மழை பதிவானது.

## <u>டெல்டா மாவட்டங்களில்கோடை சாகுபடிக்கு உரம் தயார்</u>

தஞ்சாவூர்: தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், கோடை சாகுபடிக்கு தேவையான யூரியா மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள், தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, அரியலூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் அறுவடை மும்முரமாக நடக்கிறது. அறுவடை முடிந்ததும் விவசாயிகள், கோடை கால பயிர்கள் சாகுபடியில் ஈடுபடுவர். அதற்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி வழங்க, வேளாண்மைத் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். முதற்கட்டமாக, சென்னை மணலியில் உள்ள, "மெட்ராஸ் பெர்டிலைஸர்ஸ்' உர உற்பத்தி நிலையத்திடமிருந்து, 1,167 மெட்ரிக் டன்

யூரியா, 60 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவை ரயில் வேகன்கள் மூலம், தஞ்சைக்கு எடுத்துவரப்பட்டு, லாரிகளில் தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, அரியலூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. இவற்றை அரசு நிர்ணயித்துள்ள விலையில் விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், உரங்களை வெளிமாவட்டங் களுக்கு கடத்துவதை தடுக்கவும், அதிக விலைக்கு விற்பனை செய்தல், பதுக்கலில் ஈடுபடுதல் போன்ற முறைகேடுகளை கண்காணிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கோமாரி நோய் தடுப்புசிறப்பு மருத்துவ முகாம்

கும்பகோணம்: கும்பகோணம் அருகே உள்ள கோவிந்தபுரம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு கால்நடைத்துறை சார்பில், கோமாரிநோய் தடுப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமுக்கு, ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் அஞ்சம்மாள் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். ஆடுதுறை கால்நடை டாக்டர் சுதாரோஸ் தலைமையில், கால்நடை மருத்துவனை அலுவலர்கள், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போட்டனர். முகாமில், 150க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

குஜிலியம்பாறை : கூம்பூர் கால்நடைத்துறை டாக்டர் சசிக்குமார் கூறியிருப்பதாவது: திண்டுக்கல் மாவட்ட ஊராட்சிகளில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், "கோமாரி' நோய் தடுப்பூசி முகாம் மார்ச், செப்டம்பரில் நடத்தப்படுகிறது. கோமாரி நோய் பாதித்த மாடுகளில், பால் குறைவு, பால் குடிக்கும் கன்றுகள் இறப்பது, சினை பிடிக்காதது போன்ற பாதிப்புகள் ஏற்படும். இதில் இருந்து பசுக்கள், விவசாயிகளை காக்க முகாம்கள் நடக்கின்றன. எனவே, விவசாயிகள் இம்முகாமில்

பங்கேற்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம், என கூறியுள்ளார்.

**<u>தென்னை மரங்கள் பராமரிப்பு; அறிவியல் மைய அதிகாரி யோசனை</u>**

வடமதுரை : தென்னை மரங்களை பராமரித்து அதிக மகசூல் பெறுவது குறித்து காந்திகிராம வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் சாகிந்ததாஜ் பேசினார். ஏ.வி.பட்டியில் தென்னை பாதுகாப்பு குறித்த பயிற்சி முகாம் உதவி இயக்குனர் ராணி தலைமையில் நடந்தது. இதில் சாகிந்தராஜ் பேசியதாவது: முதன்மை சத்துக்களான தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்ட பற்றாக்குறையால் குரும்பை உதிர்தல், தேரைக் காயாக மாறுதல் என தென்னை மகசூலில் பாதிப்பு ஏற்படுகிறது. இதற்கு மரத்தை சுற்றி அரைவட்டமாக குழிதோண்டி மரம் ஒன்றுக்கு தொழு உரத்துடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியாவை ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு பாக்கெட் இட வேண்டும். பின்னர் மரம் ஒன்றுக்கு யூரியா ஒரு கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் ஒரு கிலோ, தென்னை நுண்ணூட்ட கலவை ஒரு கிலோவை வருடத்திற்கு இரு தவணைகளாக இட வேண்டும். காண்டாமிருக வண்டு, சிகப்பு கூன் வண்டு, கருந்தலை புழு போன்றவற்றை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு, செல்பாஸ் மாத்திரை இட வேண்டும். ஆமணக்கு புண்ணாக்கு கலவையை விளக்கு பொறியாக வைப்பது, தலா 10 மில்லி தண்ணீர், மோனோகுரோட்டோபாஸ் கலந்து மரத்தின் இளம் வேரில் கட்டுவது போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். பூஞ்சான நோய்களாக வாடல், இலைப்புள்ளி நோய்களை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் இட்டு கட்டுப்படுத்தலாம், என்றார்.

**<u>இயற்கை முறையில் விளையும் மலை இஞ்சி</u>**

தாண்டிக்குடி : தாண்டிகுடி பகுதியில் மருந்தில்லா விளைச்சல் காணும் மலை இஞ்சியின் விளைச்சல் அமோகமாக உள்ளது. திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி, பெருமாள்மலை, அடுக்கம், பண்ணைக்காடு,

பூலத்தூர் பகுதிகளில் இயற்கை முறையில் ரசாயன உரம், பூச்சி மருந்து பயன்படுத்தாமல் இஞ்சி மகசூல் காண்கின்றனர். இவ்வகை இஞ்சிக்கு மார்க்கெட்டில் தனி மவுசு உண்டு. காரணம் சித்த மருத்துவத்தில் முக்கிய பங்கு வகிப்பது தான். முன்பெல்லாம் மலைப்பகுதி விவசாயிகள் பலர், புதர்மண்டிய நிலத்தை தேர்ந்தெடுத்து சீரமைத்து இஞ்சி பயிரிடுவர். நவீன தொழில்நுட்பம் வளர்ச்சி, சீதோஷ்ண நிலை மாற்றத்தால் தற்போது இஞ்சி பயிரிடுவோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மருத்துவ குணமுள்ள இந்த இஞ்சி காரம், மணம் நிறைந்தது. தாண்டிக்குடி நாகராஜ் கூறியதாவது: பதினைந்து ஆண்டுகளாக இஞ்சி விவசாயம் மற்றும் வியாபாரம் செய்கிறேன். சித்திரை மாதம் நடவு செய்து மறு சித்திரையில் விற்பனைக்கு தோண்டுவோம். விதைக்கு தேவையெனில் மாசி மாதம் தோண்டி பயன்படுத்துவோம். ரசாயன உரம், பூச்சி மருந்து பயன்படுத்தாமல் இயற்கையான முறையில் இங்கு இஞ்சி பயிரிடப்படுகிறதுஇந்த இஞ்சியை கும்பகோணம், மரவனூர், பூந்தோட்டம், சேன்ரப்பு, மட்டியூர் விவசாயிகள் விதைக்கு வாங்கி செல்வர். கடந்தாண்டு 60 கிலோ விதை இஞ்சி, மூடை ரூ.6 ஆயிரத்துக்கு விற்றது. இந்தாண்டு ரூ.7 ஆயிரம் வரை விலைப் போகலாம். ஒரு மூடை இஞ்சி நடவு செய்ய ரூ.4 ஆயிரம் செலவாகும். ஒரு மூடை இஞ்சியை நடவு செய்தால், அதிகபட்சமாக ஐந்து மூடை இஞ்சி கிடைக்கலாம். அதாவது 60 கிலோவுக்கு 300 கிலோ வரை மகசூல் கிடைக்கும், என்றார்.

## 97 ஆயிரம் மாடுகளுக்கு காணை நோய் தடுப்பூசி

கம்பம் : தேனி மாவட்டத்தில் 97 ஆயிரம் மாடுகளுக்கு காணை நோய் தடுப்பூசி போடும் பணியில் கால்நடை துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். கோடை துவங்குவதற்கு முன் மாடுகளுக்கு காணைநோய் தடுப்பூசி போடுவது வழக்கம். இந்த ஆண்டு தேனி மாவட்டத்தில் உத்தமபாளையம் வருவாய் கோட்டத்தில் 55 ஆயிரம் மாடுகளுக்கும், தேனி கோட்டத்தில் 42 ஆயிரம் மாடுகளுக்கும் காணை நோய் தடுப்பூசி

போடும் பணிகள் சில நாட்களுக்கு முன் துவங்கியது. வரும் மார்ச் 21 வரை நடக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் பொது இடங்களிலும், வீடு வீடாகவும் சென்று தடுப்பூசி போடப்படுகிறது. உத்தமபாளையம் உதவி இயக்குநர் ஜெகதீசன், "காணை நோய் தடுப்பூசி போடும் பணிகள் துவங்கியுள்ளது. கோடைக்கு முன் முகாமை முடிக்க திட்டமிட்டுள்ளோம் என்றார்.

**<u>பெரியகுளம் பகுதியில் நெல் அறுவடை துவக்கம்</u>**

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் முதல்போக நெல் அறுவடைப்பணி துவங்கியது. பெரியகுளம் வாராகநதியில் வரும் நீரை ஆதாரமாக கொண்டு, நல்லகருப்பன்பட்டி நாரணன்குளம், சில்வார்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், சிந்துவம்பட்டி ஒடக்குளம், பொம்மிநாயக்கன்பட்டி புதுக்குளம், குள்ளப்புரம் பெரிய கண்மாய், மருகால்பட்டி சிறுகுளம் மற்றும் மேல்மங்கலம் ராஜவாய்க்கால் பாசனம் மூலம் ஆண்டு தோறும் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல்போக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக பருவமழை தவறியதால் முதல்போக நெல் சாகுபடி நடக்கவில்லை. 3 ஆண்டுக்கு பிறகு போதிய அளவு மழை பெய்ததால் முதல்போக நெல் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டனர். தற்போது நெல் மணிகள் விளைந்துள்ளது. இதனால் பெரியகுளம் தாலுகாவில் முதல்போக நெல் அறுவடைப் பணி எந்திரங்கள் மூலம் துவங்கியது. விவசாயிகள் மகிழ்ச்சியாக உள்ளனர்.

**<u>கொடைக்கானல் ரோட்டில் இளநீர் விற்பனை தொடக்கம்</u>**

தேவதானப்பட்டி : கோடை காலம் துவங்கி விட்டதால், கொடைக்கானல் செல்லும் வழியில் காட்ரோடு அருகே ரோட்டோரங்களில் இளநீர் விற்பனை தொடங்கி உள்ளது. கோடை காலம் துவங்கி விட்டதால் கொடைக்கானல் செல்லும் சுற்றுலா வாகனங்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக காட்ரோட்டில் அம்சாபுரம், காமக்காபட்டியில் இருந்து கொடைக்கானல் மலை அடிவாரம் வரை செல்லும் ரோட்டோரங்களில் இளநீர்

விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் வாசிகளுக்கு ஒரு இளநீர் 25 ரூபாய், சுற்றுலா பயணிகளுக்கு 30 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது."கடந்த காலங்களில் ஏற்பட்ட வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. இதனால் இளநீர் கிடைப்பது அரிதாக உள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து இளநீர் கொள்முதல் செய்கிறோம். லாபம் மிகவும் குறைவாக உள்ளது" என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>ரூ. 1.19 கோடியில் நீர்வடிப்பகுதி திட்டம் ஆய்வு</u>

நாமக்கல்: நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் வட்டார பகுதியில், 1.19 கோடி ரூபாய் மதிப்பிலான நீர்வடிப்பகுதி மேலாண் திட்டத்தை, கலெக்டர் தட்சிணாமூர்த்தி ஆய்வு செய்தார். நாமக்கல் மாவட்ட, வேளாண் துறையின் நீர்வடிப்பகுதி மேலாண் திட்டத்தின் கீழ், தடுப்பணை, உலர் தளங்கள், கதிரடிக்கும் களங்கள், தடுப்புச்சுவர், ஓடைகள் தூர்வாரும் பணிகள் ஆகியன மேற்கொள்ளப்படுகிறது. மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி, நேற்று சேந்தமங்கலம் மற்றும் நாமக்கல் வட்டார பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும், நீர்வடிப்பகுதி திட்டங்களை ஆய்வு செய்தார்.நாமக்கல் வட்டாரத்தில், 13 கதிரடிக்கும் களம், 12 குடிநீர் தொட்டி, சேந்தமங்கலம் வட்டாரத்தில், எட்டு கதிரடிக்கும் களம், 18 குடிநீர் தொட்டி ஆகியவற்றிற்காக, 1.19 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இணை இயக்குனர் கார்த்திகேயன், நடவு வல்லுனர் சுப்ரமணியன், விரிவாக்க அலுவலர் சுப்ரமணியம், உதவி இயக்குனர்கள் மாயக்கண்ணன், சண்முகம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## <u>விவசாயிகள் சங்க கூட்டம்</u>

சிவகங்கை : சிவகங்கையில் விவசாயிகள் சங்க மாவட்ட குழு கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் அழகர்சாமி தலைமை வகித்தார். மாநில துணை செயலாளர் சுருளிநாதன் முன்னிலை வகித்தார். தீர்மானம்: 2013-

14ல் பயிர் காப்பீடு தொகை ரூ.153 கோடியை இது வரை வழங்க வில்லை.இதை கண்டித்து தாசில்தார் அலுவலகம், கூட்டுறவு வங்கிகள் முன் மார்ச் 17ல் மறியல் போராட்டம் நடத்தப்படும். மார்ச் 10ல் வீட்டு மனை பட்டா, முதியோர் பென்ஷன் வழங்க கோரி தாசில்தார் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் செய்வதென தீர்மானித்தனர். மாவட்ட செயலாளர் வீரபாண்டி நன்றி கூறினார்.

## உயிர் உரம் தயாரிக்க ரூ.1 லட்சம்

காரைக்குடி : விவசாய நிலங்களில் உயிர் உரம் தயாரிக்க கூடம் அமைக்க, 50 சதவீத மானியத்தில் ரூ.ஒரு லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. மண்ணை வளப்படுத்தி, உழவர்களுக்கு நண்பனாக விளங்கி வந்த மண்புழு, ரசாயன உரத்தால் அழிவின் விளிம்பில் உள்ளது. மண்ணை பாதுகாத்து தொடர் விவசாயம் மேற்கொள்ள விவசாயிகள் இயற்கை உரத்தை நம்பி உள்ளனர். இயற்கை விவசாயத்தை மேற்கொள்வோர் மண்புழு உரமிடுகின்றனர். இதையடுத்து மண்புழு உரத்தை தயாரிக்கும் முறைக்காக, வேளாண்மை துறை சார்பில் தலா ஒரு விவசாயிக்கு ரூ.1 லட்சம் ஒதுக்கியுள்ளது. சம்பந்தப்பட்ட விவசாயி இதில் ரூ.50 ஆயிரத்தை செலுத்த வேண்டும்.இதற்காக தமிழகம் முழுவதும் வேளாண்மை துறை மூலம் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயியின் நிலத்தில், 1000 சதுர அடிபரப்பள வில், 25 அடி அகலம், 40 நீள கூடாரம் அமைக்கப்படுகிறது. கூடாரத் தினுள் 30 அடி நீளம், 2.5 அடி உயரம், தலா மூன்று அடி அகலம் கொண்ட மண்புழு உரத்தொட்டிகள் அமைக்கப்படுகிறது.

## கறவை மாடுகள் காப்பீடுக்கு அழைப்பு


விருதுநகர் : மாவட்டத்தில் மார்ச் 2015வரை 8,800 கறவைமாடுகளுக்கு மானியத்துடன் கூடிய காப்பீட்டுத்திட்டம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. 2,800 கறவை மாடுகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை, 6,000 கறவை மாடுகளுக்கு

ஆவின் மூலம் கால்நடை காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்துடனும் மற்றவர்களுக்கு 50 சதவீத மானியத்துடனும் காப்பீடு செய்யப்படும். ஒரு நபருக்கு அதிகபட்சம் 5 மாடுகள் காப்பீடு செய்து கொள்ளலாம். மேல் விபரங்களுக்கு விருதுநகர், ஸ்ரீவி., கால்நடைபராமரிப்புத்துறை உதவி இயக்குனர்கள், விருதுநகர் மண்டல இணை இயக்குனர், ஸ்ரீவி., ஆவின் பொதுமேலாளரை தொடர்பு கொள்ளலாம் என, கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்வு</u>**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில், முட்டை விலையில் 5 காசு உயர்த்தப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு நேற்று முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றம் செய்துள்ளது. ஒரு முட்டை விலையில் 5 காசு உயர்த்தி 260 காசாக நிர்ணயம் செய்துள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலையில் 5 முதல் 10 காசு வரை உயர்ந்துள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக் கோழி விலை ரூ.38 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.54 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**<u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>**

விக்கிரவாண்டி, : விக்கிரவாண்டி அருகே ஆவுடையார்பட்டு கிராமத்தில் கால்நடை பராமரிப்புதுறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

நடந்தது. கால்நடை பராமரிப்பு துறை மண்டல இயக்குனர் ராமசாமி தலைமை தாங்கினார். துணை இயக்குனர் தேவராஜன், விழுப்புரம் உதவி இயக்குனர் சுந்தரராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி தலைவர் நீதிகோபிநாத் வரவேற்றார். விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கதலைவர் அரிகரன் முகாமை துவக்கி வைத் தார். விக்கிரவாண்டி, வி.சாத்தனூர் கால்நடை மருத்துவமனை உதவி மருத்துவர்கள் யுவராஜ், கீர்த்தி ஆகியோர் கொண்ட குழுவினர் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு அடை யாள அட்டை வழங்கினர். கால்நடை ஆய்வாளர்கள் கமல வேணி, செல்வக்குமார், உதவியாளர்கள் மணி, ரேணுகா மற்றும் ஊர் பொதுமக்கள்கலந்துகொண்டனர்.

**<u>கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பு முகாம் துவக்கம்</u>**

நாமக்கல், : நாமக்கல் மாவட்டத்திலுள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடைகளுக்கான கோமாரிநோய் தடுப்பூசி முகாம் துவங்கியுள்ளது. இதில், தங்களது கால்நடைகளுடன் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தவும், முறையாக வகையில் பராமரிக்கவும் விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு துறையினர் பல்வேறு நோய் தடுப்பு முறைகள் குறித்து செயல் விளக்கம் கொடுத்து வருகிறார்கள். அதேபோல், கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் படி நாமக்கல் அருகே சிலுவம்பட்டி கிராமத்தில் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி கால் நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். 21 நாட்கள் முகாம் தொடர்ந்து நடக்கிறது. முதல் நாளில் மட்டும் 2 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கால்நடைப்பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சக்திவேலு மற்றும் உதவி இயக்குனர்கள் பாஸ்கர்,

ஜனகராஜன், மோகன்ராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் விவசாயிகள் ஒவ்வொரு வாரமும் கால்நடைகளுக்காக ஏற்படுத்தப்படும் முகாம்களில் விவசாயிகள் கலந்து கொண்டு தேவையான விளக்கங்களை பெற வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**<u>கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பு முகாம் துவக்கம்</u>**

நாமக்கல், : நாமக்கல் மாவட்டத்திலுள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடைகளுக்கான கோமாரிநோய் தடுப்பூசி முகாம் துவங்கியுள்ளது. இதில், தங்களது கால்நடைகளுடன் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறு மாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தவும், முறையாக வகையில் பராமரிக்கவும் விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு துறையினர் பல்வேறு நோய் தடுப்பு முறைகள் குறித்து செயல் விளக்கம் கொடுத்து வருகிறார்கள். அதேபோல், கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் படி நாமக்கல் அருகே சிலுவம்பட்டி கிராமத்தில் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி கால் நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தொடங்கி வைத்தார். 21 நாட்கள் முகாம் தொடர்ந்து நடக்கிறது. முதல் நாளில் மட்டும் 2 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சக்திவேலு மற்றும் உதவி இயக்குனர்கள் பாஸ்கர், ஜனகராஜன், மோகன்ராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் விவசாயிகள் ஒவ்வொரு வாரமும் கால்நடைகளுக்காக ஏற்படுத்தப்படும் முகாம்களில் விவசாயிகள் கலந்து கொண்டு தேவையான விளக்கங்களை பெற வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**<u>இடியுடன் பெய்த கனமழை மா விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. கோடை வெயில்

துவங்கும் முன்பே வாட்டி வதைத்த வெயில் காரணமாக, இரவில் புழுக்கம் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் மாவட்டத்தின் பல பகுதிகளில், நேற்று முன்தினம் திடீரென மழை பெய்தது. சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழையும், லேசான மழையும் பெய்தது. ஓசூர் அருகே பெய்த கனமழையின் போது மின்னல் தாக்கி 11 ஆடுகள் கருகின. கிருஷ்ணகிரி நகரில் இரவு 10 மணியளவில் லேசாக பெய்ய துவங்கிய மழை, தொடர்ந்து அதிகரித்து பயங்கர இடியுடன் சுமார் ஒரு மணி நேரம் கொட்டி தீர்த்தது. இந்த மழையால் பூமி குளிர்ச்சியடைந்து, வெப்பத்தின் தாக்கம் குறைந்தது. தற்போது மாமரங்களில் பூக்கள் காயாகும் பருவம் என்பதால், விவசாயிகள் மழையில்லாமல் அவதிப்பட்டு வந்தனர். சந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் மாமரங்களுக்கு டிராக்டர் மூலம் தண்ணீர் விலைக்கு வாங்கி செடியை காத்து வந்தனர். நேற்று அப்பகுதியில் பெய்த பரவலான மழையால் மா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை 8 மணி நிலவரப்படி அதிகப்பட்சமாக கிருஷ்ணகிரியில் 35.2 மில்லிமீட்டர் மழை பெய்தது. மற்ற பகுதிகளில் மழை விவரம் (மில்லிமீட்டரில்): நெடுங்கல் - 17.2, அஞ்செட்டி - 23, பாரூர்- 19.6, போச்சம்பள்ளி -9.6, தேன்கனிக்கோட்டை -2,ராயக்கோட்டை-3பதிவாகிஉள்ளது.

**<u>திருச்செந்துறை வணிக வளாகத்தில் ரூ.1.20 லட்சத்திற்கு வாழைத்தார்கள் ஏலம்</u>**

திருச்சி, : திருச்செந்துறையில் ரூ.1.20 லட்சத்திற்கு வாழைத்தார்கள் பொது ஏலம் விடப்பட்டது.ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் செவ்வாய்தோறும் வாழைத்தார் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொது ஏலத்தில் கிளியநல்லூர், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி, குழுமணி, லால்குடி, அந்தநல்லூர், பெட்டவாய்த்தலை, பெருகமணி, குளித்தலை,

மஞ்சக்கோரை, எரிகுளம் ஆகிய கிராமங்களில் இருந்து 35 விவசாயிகள் பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சலாடன், ஏலரசி, ரொபஸ்டா ஆகிய ரகங்களை சேர்ந்த 1,726 வாழைத்தார்களுடன் கலந்து கொண்டனர். இதேபோல் பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட், சீத்தலைவாய், திண்டுக்கல், மணப்பாறை ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த 18 வியாபாரிகள் வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். இதில் மொத்தம் ரூ.1,20,957க்கு வாழைத்தார்கள் ஏலம் போனது. இதில் ரஸ்தாளி தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.340க்கும், பூவன் ரூ.260, கற்பூரவள்ளி ரூ.210, மொந்தன் ரூ.210, பச்சலாடன் ரூ.330, ஏலரசி ரூ.552, ரொபஸ்டா 85வீதம் ஏலம் போனது. தரமான வாழைத்தார்கள் நல்ல விலைக்கு ஏலம் போனது. இந்த வாரமும் இடைத்தரகர்களின்றி, கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**துறையூர் விற்பனை கூடத்தில் 4,297 கிலோ பருத்தி ஏலம்**

திருச்சி, : துறையூரில் நேற்று கடந்த மறைமுக ஏலத்தில் 4,297 கிலோ பருத்தி ஏலம் விடப்பட் டது. விவசாயிகள் அனை வருக்கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.திருச்சி மாவட்டத்தில் பருத்தி பயிர் மானாவாரியாக 16,453 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள் ளது. கடந்த வருடம் முதல் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறை முக ஏலம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இவ்வருடம் தற்போது பருத்தி அறு வடை துவங்கியுள்ளதால் துறையூரில் நேற்று மறை முக ஏலம் நடை பெற்றது. டி.களத்தூர், சிக்கத்தம்பூர், கீரம்பூர், கொப்பம்பட்டி, நடுவலூர், துளையாநத்தம், நள்ளியன்பாளையம் ஆகிய கிராமங்களில் இருந்து 30 விவசாயிகள் தங்கள் அறு வடை செய்த 149 மூட்டை பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல் நாமக்கல், பெரம்பலூர், துறையூர், பாடாலூர் பகுதிகளில் இருந்து 4 வியாபாரிகள் கலந்து

கொண்டு ஏலம் எடுத்தனர். ஒரு கிலோ பருத்தி அதிகபட்சமாக ரூ.41.10 க்கும், சராசரியாக ரூ.40க்கும் ஏலம் போனது. மொத்தம் 4,297 கிலோ பருத்தி ரூ.1,67,006 க்கு ஏலம் போனது. இடைத்தரகர்களின்றி, கமிஷன் இல்லா மல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக் கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட் டது.

## மகாராஷ்டிர மாநில விளாம்பழம் விற்பனை விறுவிறுப்பு

கரூர், : கரூரில் மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட விளாம்பழம் விற்பனை அதிகரித்துள்ளது. கோடை காலம் துவங்கி விட்டால் தர்ப்பூசணி பழம் முதல் பல்வேறு பழ வகைகள் கருர் ஜவஹர் பஜாரில் வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வருவது வாடிக்கையான ஒன்று. இந்த ஆண்டு, ஜவஹர் பஜாரில் மகாராஷ்டிர மாநிலப்பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட விளாம்பழங்கள் கிலோ ரூ.40 என்ற அடிப்படையில் வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். கரூருக்கு இந்த பழம் புதிது என்பதால் பொதுமக்கள் இதனை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

## 48 விவசாயிகளுக்கு இடுபொருட்கள்

அரியலூர், : தா.பழூர் வட்டாரத்தில் துவரை சாகுபடியில் உற்பத்தி திறனை பெருக்குவதற்கு, 48 விவசாயிகளுக்கு பயிற்சி முகாமில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது.அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டார விவசாயிகளுக்கு, அட்மா திட்டத்தின் சார்பில் நடவு துவரை செயல் விளக்க பயிற்சி முகாம் தா.பழூர் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்றது. அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்றார். தா.பழூர் ஒன்றிய குழுத்தலைவர் ஜெயசுதா தலைமை வகித்து 48 பயனாளிகளுக்கு ரூ. 1.44 லட்சம் மதிப்பில் விதை, உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் வழங்கி பேசினார். தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி செயல் விளக்கப்பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:தா.பழூர்

வட்டாரத்தில் தமிழக அரசின் உத்தரவின்படி நடவு துவரை சாகுபடி செயல் விளக்கப்பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் முக்கியமான பயிறு வகைகளில் துவரையும் ஒன்றாகும். பயிறு வகைகளில் விளைச்சல் குறைவதற்கு தட்வெட்ப சூழ்நிலை, போதிய தொழில் நுட்பம் கடைப்பிடிக்காமை, பூச்சிகளின் தாக்கத்தை முறைப்படி கட்டுப்படுத்தாமல் இருப்பது போன்றவை முக்கிய காரணங்களாக இருக்கிறது. இவைகளை ஆரம்ப கட்டத்திலேயே விவசாயிகள் தெரிந்து கொண்டு இதற்கான வழிமுறைகளை வேளாண் அதிகாரிகள் மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்களிடம் ஆலோசனை கேட்டு தகுந்த நடவடிக்கை பணிகளை கடைப்பிடித்தால், எந்த பயிராக இருந்தாலும் அதிக மகசூல் பெறலாம். துவரை சாகுபடியை பொறுத்தவரை பூக்கும் பருவத்தில் 2 சத டிஏபி கரைசலை தெளிக்க வேண்டும். பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளை கையாளுவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என்றார்.பயிற்சி முகாமுக்கு மாவட்ட கவுன்சிலர் வாசுராஜேந்திரன் முன்னிலை வகித்தார். வேளாண் அதிகாரி சுகந்தி, துணை வேளாண் அதிகாரி ரவிச்சந்திரன், உதவி வேளாண் அதிகாரி ராஜா மற்றும் தா.பழூர் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். முகாமில் அட்மா திட்டத்தில் 13 விவசாயிகளுக்கு தலா ரூ.2 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 26 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. முடிவில், அட்மா திட்ட துணை மேலாளர் உஷா நன்றி கூறினார்.

## <u>நுண்ணீர் பாசனம் அமைக்க பழங்குடியின விவசாயிக்கு மானியம் ரூ.21.06 லட்சம் நிதி ஒதுக்கீடு</u>

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகள் மானியத்தில் நுண்ணீர் பாசன அமைத்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.21.06 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்கள் வயல்களில் சாகுபடி செய்யும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை

பயிர்களுக்கு நுண்ணீர் பாசனம் அமைத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தி லாபம் பெற 2014- 15ம் ஆண்டில் பண்ணை நீர் மேலாண்மையில் தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின்கீழ் 33.20 எக்டேரில் நுண்ணீர் பாசனம் அமைக்க ரூ.21.06 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 20 சதவீதம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 75 சதவீதம் மற்றும் 100 சதவீதம் மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்து கொள்ளலாம். வேளாண்துறை மற்றும் தோட்ட கலைத்துறை பயிர்களுக்கு மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் தகுதியான தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகள் உடனடியாக மாவட்ட மற்றும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம். தஞ்சாவூர் தோட்டக்கலை துணை இயக்குனர் 04362- 271880, 04362-232540, 9842613902, தஞ்சாவூர், திருவையாறு தோட்டக்கலை உதவி இயக்குனர் 04362-255640, 9443073157, பூதலூர், ஒரத்தநாடு தோட்டக்கலை உதவி இயக்குனர் 04372-234300, 9655577082, கும்பகோணம், திருவிடைமருதூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் 0435- 2414594, 9965362562, பாபநாசம், அம்மாப்பேட்டை, திருப்பனந்தாள் தோட்டக்கலை உதவி இயக்குனர் 04374- 220040, 9842184435, பட்டுக்கோட்டை, மதுக்கூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் 04373- 237020, 9345746431, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவோணம் தோட்டக்கலை உதவி இயக்குனர் 04373- 231073, 9698719704 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தங்கள் வயலில் நுண்ணீர் பாசனம் அமைத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தி 2 மடங்கு மகசூல் பெற்று 3 மடங்கு வருமானம் பெறலாம். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

## தஞ்சை மாவட்டத்தில் 3.92 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி இலக்கு நிர்ணயம் அமைச்சர் தகவல்

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் 3.92 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வைத்திலிங்கம் தெரிவித்தார்.தஞ்சையில் கால்நடை பராமரிப்பு துறைசார்பில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்தார். அமைச்சர் வைத்திலிங்கம் முகாமை தொடங்கி வைத்து பேசும் போது, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராமம் மற்றும் குக்கிராமங்களிலும் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி தடுப்பூசி திட்டத்தின் கீழ் தடுப்பூசி போ டும் பணி இன்று தொடங்கி 21 நாட்கள் நடைபெறுகிறது. தடுப்பூசி போடுவதற்கு என்று தனி குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். தஞ்சை மாவட்டத்தில் 3.92 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சினை மாடுகளுக்கும் தடுப்பூசி போடலாம். கொ டிய நோய்கள் தாக்காமல் இருக்க அவசியம் தடுப்பூசி போட வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், எம்எல்ஏக்கள் ரங்கசாமி, ரத்தினசாமி, கூட்டுறவு நிலவள வங்கி தலைவர் துரை.வீரணன், ஊராட்சி தலை வர் ராயப்பன், துணை தலைவர் முருகேசன், கால் நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம், உதவி இயக்குநர்கள் டாக்டர் நெடுஞ்செழியன், டாக்டர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தேர்வு

நாகை,: நாகை மாவட்டம் கீழ்வேளூரில் தமிழக காவிரி விவசாயிகள் சங்க மாவட்ட அமைப்பு கூட்டம் நடைபெற்றது. அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பி.ஆர்.பாண்டியன் தலைமை வகித்தார். கூட்டத்தில் மாவட்ட கவுரவத் தலைவராக ஷேக் யூசுப், தலைவராக புலியூர் பாலசுப்பிரமணியன், செயலாளராக கீழ்வேளூர்

ராமதாஸ், துணைத் தலைவர்களாக கேவரோடை சீனிவாசன், தலைஞாயிறு வேதரெத்தினம், நாகூர் ஜபருல்லாஹ், பழையனுர் நடராஜன், துணை செயலாளர்களாக மீனம்பநல்லூர் ஸ்ரீதர், இருக்கை சவுந்தர்ராஜன், சிக்கவலம் துளசிராஜன், பொருளாளராக கடம்பர வாழ்க்கை கண்ணப்பன் மற்றும் 35 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**<u>தேனி மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் கால்நடைகளுக்கு தடுப்பூசி விடுபட்டால் மீண்டும் வாய்ப்பு</u>**

தேனி, : தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. விடுபட்ட கால்நடை களுக்கு வரும் 22ம் தேதி முதல் மீண்டும் வாய்ப்பு தரப்படும். கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய்க்காணை நோய் தடுப்பூசி பணிக்கான ஆலோசனைக் கூட்டம் தேனி கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் தனசேகரன் முன்னிலை வகித்தார். உதவி இயக்குநர் முருகேசன், ஜெகதீசன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் வடிவேல், பேரூராட்சிகளுக்கான உதவி இயக்குநர் சேதுராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலெக்டர் வெங்கடாசலம் பேசுகையில், தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் வரும் 21ம் தேதி வரை காலை 6 மணி முதல் காலை 9 மணி வரையும், மாலையில் 3 மணி முதல் மாலை 6 மணி வரையும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விடுபட்ட கால்நடைகளுக்கு வரும் 22ம் தேதி முதல் 30 ம்தேதி வரை தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளும் குழுவில் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் ஒரு கால் நடை பராமரிப்பு உதவியாளர் இடம் பெற வேண்டும். மேலும், அக்

குழுவில் ஒரு பயிற்சி கால்நடை மருத்துவரோ, ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளரோ, பயிற்சி கால்நடை ஆய்வாளரோ, தனியார் செயற்கை முறை கருவூட்டாளரோ இருப்பின் குழுவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு சுழல் நிதிக்கான காசோலை</u>**

தர்மபுரி மாவட்டம் மொரப் பூர் அருகே உள்ள மணியம்பாடி ஊராட்சி மாரியம்மன் நகரில் கிராம அளவில் பயிர் சார்ந்த தொழிற்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை இயக்குனர் பாஸ்கர் பயிற்சி வகுப்பை தொடங்கி வைத்தார். இதில் பயிர் சார்ந்த தொழிற்நுட் பங்கள் மற்றும் பட்டு வளர்ச்சி, விற்பனை, வணிகம், மானியத் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினர். அதைதொடர்ந்து உழவர் பயிற்சி நிலையம் சார்பில் உழவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண் டனர். வேளாண்துறையின் மானிய திட்டங்கள் குறித்து சண்முகவேல் விளக்கி கூறி னார். இந்த பயிற்சியின் போது பண்ணை மகளிர் குழு உறுப் பினர்களுக்கு சுழல் நிதிக்கான காசோலை வழங்கப்பட்டது. இதில் வேளாண் அலுவலர்கள், வட்டார தொழில்நுட்ப அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.